உ

சிவமயம்



யாழ்ப்பாணம் - நல்லூரைப் பிறப்பிடமாகவும்,

சித்தன்கேணியை வசிப்பிடமாகவும்,

உயர் சைவ வேளான் குலத்துதித்தவருமாகிய

அமரர்

# திருமதி சி. இரத்தினம்மா

அவர்களின்

சிவபதப் பேறு குறித்த

# நினைவு மலர்

13-11-1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



யாழ்ப்பாணம் - நல்லூர்
அமரர்களான விசுவலிங்கம் தங்கம்மா
தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும்
சித்தன்கேணியில் தோன்றிய
வெலிமடை இந்திரா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்
அமரர் இராமலிங்கம் சின்னத்தம்பி
அவர்களின் இல்வாழ்க்கைத் துணைவியார்

அமரர் திருமதி

# சின்னத்தம்பி இரத்தினம்மா

அவர்களின்

சிவபதப்பேறு குறித்து வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

13-11-1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமர்ப்பணம்



எங்கள் குடும்பத் தலைவியாக இருந்து கண்ணை இமை காப்பது போல் எம்மைக் காத்து வளர்த்து உயர் வளித்து இறைவனடி சேர்ந்த எங்கள் குல தெய்வத்தின் பாதக் கமலங்களில் இச் சிறு நூலினை காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.



மக்கள்
மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் திருமதி

# சின்னத்தம்பி இரத்தினம்மா

அவர்கள்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11-05-1914 | 14-10-1997 |

## திதிவெண்பா

ஈசுர வாண்டு புரட்டாதிப் பூர்வமதில்
ஆசில் திதியாம் சதுர்த்தசியில் - பாசமிகு
இரத்தினம்மா சின்னத்தம் பியெமை விட்டு
இறையடி சேர்ந்தநன் னாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரத் திரட்டு

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

அந்த ணாளனுன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரணமாக
வந்த காலன் தன் ஆருயிர தனை
வவ்வினாய்க் குன் தன் வண்மைகண்டடியேன்
எந்தை நீஎனை நமன்தமர் நலியின்
இவன்மற் றென்னடி யானென விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும்பொழில் திருப்புன் கூருளானே.

## திருவாசகம்

வேண்டத்தக்க தறிவோய் நீ
வேண்டமுழுதுந் தருவோய் நீ
வேண்டும் அரன்மாற் கரியோய்நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டிநீ யாதருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன்று உண்டென்னில்
அதுவும் உன்தன் விருப்பன்றே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிவளா ருள்ளத் தானந்தக் கனியே
யம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புகழ்

திருமக ளுலாவும் இருபுய முராரி
திருமருக நாமப் பெருமாள் காண்,
செகதலமும் வானும் மிகுதி பெறுபாடல்
தெரிதரு குமாரப் பெருமாள் காண்,
மருவு மடியார்கள் மனதில் விளையாடும்
மரகத மயூரப் பெருமாள் காண்,
மணிதரளம் வீசி அணியருவி சூழ
மருவு கதிர்காமப் பெருமாள் காண்,
அருவரைகள் நீறுபட அசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள் காண்,
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமலர் குருநாதப் பெருமாள் காண்.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

# விநாயக கவசம்

வளர்ச்சிகையைப் பராபரமாய் வயங்குவிநா
யகர்காக்க வாய்ந்த சென்னி
யளவுபடா வதிகசவுந் தரதேக
மதோற்கடர்தா மமர்ந்துகாக்க
விளரறநெற் றியையென்றும் விளங்கியகா
சிபர்காக்க வுருவந் தம்மைத்
தளர்வின்மகோ தரர்காக்க தடவிழிகள்
பாலசந்திரனார் காக்க
கவின் வளரு மதரங்கச முகர்காக்க
தாலங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகங் கிரிசைசுதர் காக்கநனி
வாக்கைவிநா யகர்தாங் காக்க
தவிர்நகைதுன் முகர்காக்க வள்ளெழிற்
செஞ்செவி பாசபாணி காக்க
தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணிநா
சியைச்சிந்தி தார்த்தர் காக்க
காமருபூ முகந்தன்னைக் குணேசர் நனி
காக்ககளங் கணேசர் காக்க
வாமமுறுமிரு தோளும் வயங்குகந்த
பூர்வசர்தா மகிந்து காக்க
ஏமமுறு மணிமுலைவிக் கினவினா
சன்காக்க விதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்கவகட்
டினைத்துலங்கே ரம்பர் காக்க
பக்கமிரண் டையுந்தரா தரர் காக்க
பிருட்டத்தைப் பாவநீக்கும்
விக்கினக ரன்காக்க விளங்கிலிங்கம்
வியாளபூடணர் தாங் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிர துண்டர்
காக்கசனத்தையல்லல்
லுக்ககண பன்காக்க வூருவைமங்
களமூர்த்தி யுவந்து காக்க
தாழ்முழந்தாள் மகாபுத்தி காக்கவிரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதமேக தந்தர் காக்க
வாழ்கரங்கிப் பிரப்பிரசா தனர்காக்க
முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச்செய் யாசாபூ ரகர்காக்க
விரல்பத்தும் வத்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள் விநா யகர்காக்க
கிழக்கினிற்புத் தீசர் காக்க
அக்கினியிற் சித்தீசர் காக்கவுமா
புத்திரர்தென் னாசை காக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க
விக்கினவர்த் தனர்மேற் கென்னுந்
திக்கதனிற் காக்கவா யுவிற்கசகன்
னன்காக்க திகழுதீசி
தக்கநிதிபன்காக்க வடகிழக்கி
லீசநந் தனரே காக்க
ஏகதந்தர் பகன்முழுதுங் காக்கவிர
வினுஞ்சந்தி பிரண்டன் மாட்டும்
ஓகையின்விக் கினகிருது காக்கவிராக்
கதர்பூத முருவே தாள
மோகினீபே யிவையாதி யுயிர்த் திறந்தால்
வருந்துயரு முடிவிலாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபுபா
சாங்குசர்தாம் விரைந்து காக்க
மதிஞானந் தவந்தான மானமொளி
புகழ்குலம்வண் சரீர முற்றும்
பதிவான தனந்தானி யங்கிரக
மனைவி மைந்தர் பயின்ட் பாதிக்
கதியாவுங் கலந்து சர்வா யுதர்காக்க
காமர்பவுத் திரர்முன் னான
விதியாருஞ் சுற்றமெலா மயூரேச
ரெஞ்ஞான்றும் விரும்பிக்காக்க
வெற்றிசீ விதங்கபிலர் காக்ககரி
யாதியெலாம் விகடர் காக்க
எற்றிவ்வா றிதுதனைமுக் காலமுமோ
திடினும்பா லிடையூ றொன்றும்
ஒன்றுறு முனிவரர்கா ளறிமின்கள்
யாரொருவரோதினாலு
மன்றவாங் கவர்தேசம் பணியறவச்
சிரதேக மாகி மன்னும்.

**விநாயகர் கவசம் முற்றிற்று**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த் தொலிபோய்
வீதிவாக் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின் மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாளென் னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய்

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தனா னந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன்பழ வடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞானமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்

அன்னே இவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப்பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவர் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய்

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன் ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய்

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இறைஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புலன்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய்

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடை யாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவணமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாதோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நம்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கல்லோ ரெம்பாவாய்

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பட்டினத்துப் பிள்ளையார் தாயின் மறைவின்போது பாடியது

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்துபெற்று
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே
அந்திபக லாய்ச்சிவனை யாதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றுந் தாயார் தமக்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்

அள்ளி யிடுவ தரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகம்மேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே என அழைத்த வாய்க்கு

வீற்றிருந் தாளன்னை வீதி தனிலிருந்தாள்
நேற்றிருந்தாள் இன்றுவெந்து நீறானாள் - பாற்றெளிக்க
எல்லீரும் வாருங்கள் ஏதென் றிரங்காமல்
எல்லாம் சிவமயமே ஆம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்"

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" — குறள்

தெய்வ மணம் கமழும் சித்தன்கேணியில் உத்தம சைவ வேளான் குல பெரியோரான திரு சங்கரப்பிள்ளை என்பார் வாழ்ந்து வந்தார். தங்கம்மா என்னும் பெண்ணுடன் இல்லறம் ஏற்று சாண்றோர் வழியில் நல்லறம் நடாத்தினார். இவர்களுக்குப் புதல்வராக அமரர் நடராசாவும், புதல்வியாராக அமரர் செல்லம்மா அவர்களும், இரத்தினம்மாவும் பிறந்தனர். 1914 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 11 ஆம் திகதி நல்லூரில் இரத்தினம்மா அவர்கள் பிறந்தார்.

இவர்கள் மூவரும் முக்கனி போல் வளர்ந்து வரும் காலத்தில் இளமையிலேயே தாயை இழந்தனர். தந்தையாரினதும் பேத்தியாரினதும் அரவணைப்பில் வளர்ந்தனர். இவர் தம் இளமைக் கல்வியை வட்டுக் கிழக்கில் அமைந்துள்ள கதிரேசச் சட்டம்பியார் பாடசாலையில் பெற்றுக் கொண்டார். பெரியோரின் நல்லாசியோடு 1939 ஆம் ஆண்டு மூளாய் இராமலிங்கம் சின்னத்தம்பி என்பவரை தம் வாழ்க்கைத் துணைவராக கைப்பிடித்தார் இல்லற தர்மங்கள் வழுவாது வாழ்க்கை நடாத்திய இத் தம்பதியற்கு இறையருளால் நான்கு ஆண் குழந்தைகளும், நான்கு பெண் குழந்தைகளும் பிறந்தனர்.

இவர் ஒரு இல்லறத் தலைவிக்குரிய நற்பண்புகள் கணவருக்கு சிறந்த துணைவியாகவும், பிள்ளைகளிற்கு அருமைத் தாயாகவும், மருமக்களுக்கு அன்பு மாமியாகவும், பேரப்பிள்ளைக்குப் பாசமுள்ள பாட்டியாகவும் விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1993 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18 ஆம் திகதி தனது அருமைக் கணவரை இழந்தார். எல்லோருடனும் அன்பாகப் பழகும் பண்பும், பிறர் துயர் கேட்டறிந்து உதவி செய்யும் மனப்பாங்கும் இவரிடம் இருந்ததனால் உறவினர்களதும், நண்பர்களதும், அயலவர்களதும் அன்பைப் பெற்றிருந்தார். வாழ்க்கையில் எவ்வித குறையுமின்றி நன்னெறியில் ஒரு பூரணத்துவமான முழுவாழ்வை வாழ்ந்து காட்டினார். தனது 83 ஆவது வயதில் வாழ்வாங்கு வாந்த இவர் தனது பூதவுடலை நீத்துக் கொண்டார் 1997ஆம் ஆண்டு புரட்டாதி மாத (14-10 1997) பூர்வ பட்ச சதுர்த்தசியில் சிவன் கழல் சேர்ந்தார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**தேற்றம்**

நீர்க்குமிழி போலாகும் நீளுலகில் இவ்வாழ்வு
யார்க்கும் நிலையில்லை யென்றந்தே - ஊர்க்குரைத்தார்
மெஞ்ஞானி பல்லோர்கள் மேலிரங்கேல் நன்மனமே
உய்வழியே போவோமென் றோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் ஆச்சி!

'ராசா' 'குஞ்சு' 'மேனை' 'செல்வம்' என்று எங்களை யெல்லாம் அன்பு பொங்க விளித்து அழைத்து - போகும்போதெல் லாம் கந்தையா அண்ணையைக் கொண்டு மோரோ, தேசிக்காய்த் தண்ணீரோ, சாப்பாடோ (தயிருடன்) தந்து எம்மைத் தமது சொந்தப் பேரப்பிள்ளைகள் போலவே நடாத்தி ஆதரித்த எங்கள் 'சித்தன்கேணி ஆச்சி' மறைந்த செய்தி கேட்டு நான் அதிர்ச்சியில் துடித்துவிட்டேன்.

1990 இல் நான் கொழும்புவரமுன் யாழ்ப்பாணத்திற்கோ தெல்லிப்பழைக்கோ போகும் வேளைகளில் ஆச்சி வீட்டுக்குப்போக எண்ணினாலும் போனால் கதைத்து எப்படியும் ஆச்சி குடிப்பதற்கு அல்லது சாப்பிடுவதற்கு ஏதேனும் தந்தபின்தான் எம்மைப் போக அனுமதிப்பா அதனால் நேரம் போய்விடுமென எண்ணி எங்கு செல்ல வேண்டுமோ அங்கு சென்றபின் திரும்பும் வழியில் போய் ஆச்சி அப்பு இருவருடனும் கதைத்துச் சாப்பிட்டு வந்த நாட்களை மறக்க முடியாது. நெற்றியில் குங்குமத்துடன் செக்கச் சிவேரென ஆச்சியின் உருவம் ''மகா லக்ஷ்மி'' போல இன்றும் என்முன் நிலைத்திருக் கிறது.

எங்கள் அம்மம்மாவைப் போலவே (பார்த்ததில்லை) ஆச்சி யும் புண்ணியவதியாக தரும வழிநின்று பலரையும் வழி நடத்திய தையும் ஆதரித்ததையும் தெரிந்தவன் நான். எனது அம்மா, பெரி யம்மாமார், மாமாமார் அனைவரும் 'மாமி' 'மாமி' என்று பாசத் தோடும் மரியாதையுடனும் பழகிய நாட்களை எண்ணிப்பார்க்கின் றேன்.

'விருந்தோம்பல்' என்கிற சொல்லுக்கு உயிரளித்த எமது அம்மா வழியிலான ஆச்சியின் பிரிவு எமக்கு மட்டுமல்ல எம்மனை வருக்குமே ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்திவிட்டது.

அப்புவின் மறைவுக்குப்பின் ஆச்சியைப் போய் பார்க்க வேண்டும் என்று எண்ணியிருந்தேன். தர்மவான் ஆச்சியை நான் பார்க்க முன்னரே கொண்டு சென்றுவிட்டான்

ஆச்சி மீதுள்ள அன்பை, பாசத்தை, மரியாதையை சொல்ல முடியாது. இச்சிறியேன் அந்த வீட்டில் மூலை முடுக்கெல்லாம் ஓடித் திரிந்த அந்த நாட்கள். அப்பப்பா ...... எண்ணிப் பார்க்கையில் ...... இன்று நாடுள்ள நிலையில் அப்படி எல்லாரும் ஒன்றுகூடி இருக்க.. ...... .. முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர்
வேண்டா நமக்குமது வழியே நாம்போமளவும்
நமக்கென்றிட்டு உண்டுரும் என்ற ஔவையின்

வாக்கிற்கொப்ப ஆச்சியின் விருந்தோம்பலை அவர்தம் பிள்ளைகளான மாமிமாரும், சித்தப்பாமாரும், மாமாமாரும், சித்திமாரும், குறிப்பாக பேரப்பிள்ளைகளான தம்பி, தங்கைகளும் செய்ய வேண்டும் என வேண்டி ஆச்சியின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனையும் எம்பிராட்டியையும் பிரார்த்தித்து அமைகின்றேன்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


என்றும் பாசமும் அன்பும் மறவாத
மூளாய் வழிப் பேரன்
தங்க முகுந்தன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ம்சா வழி

கதிரவேலு + சிதம்பரம்

தெய்வானைப்பிள்ளை + இராமலிங்கம்
- நாகலிங்கம்
- நாகம்மா

சின்னப்பிள்ளை + இராமலிங்கம்
- சின்னத்தம்பி

...வி + ...தன்
- ...
- ...ன்

தில்லைநாயகி + பிறைசேரழகனார்
- சித்திரகலா

தேவகாரணி + சக்திதாசன்
- அஜித்
- கஜன்

சிவசுப்பிரமணியம் + விபுலாதேவி
- சிவசர்மிலா
- சிவவத்சலா
- சிவசகிலா

சண்முகநாதன் + அருந்ததிதவநாயகி
- சுகன்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் முன்னறி தெய்வமாக இருந்து இறைபதம் எய்திய திருமதி இரத்தினம்மா சின்னத்தம்பி அவர்களின் ஈமச்சடங்கிலும், இறுதிக் கிரியைகளிலும் பங்கு பற்றியவர்களுக்கும், தொலைபேசி, தந்தி கடிதங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், பலவற்றாலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், ஊரார் மற்றும் உள்ளோர்க்கும் அந்தியேட்டி வீட்டுக் கிருத்தியங்களிற் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்தோருக்கும் எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாங்குளம், கொழும்பு, கனடாவில் வாழும் அன்னாரின் பிள்ளைகளிடம் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்த உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எங்கள் நன்றி.

இங்ஙனம்

சித்தன்கேணி
13-11-1997

**மக்கள், மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ கோமதி அச்சகம்
சங்கானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org